வட.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல 32/2025

எனது இல.**NP/07/10/01/207**
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
**22.09.2025**

செயலாளர், சுகாதார அமைச்சு,
பணிப்பாளர், மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் மர்த்தனவியலாளர் (Masseur) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (மட்டுப்படுத்தப்பட்ட) விண்ணப்பம் கோரல் -2025**

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களின் CP/DEC/25ம் இலக்க 2025.07.16ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07ம் திகதிய அமைச்சரவைக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் NP/014/01/Recruitment/2025 ஆம் இலக்க 2025.08.04 திகதிய சிபார்சுக்கு அமைவாகவும், **வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் மர்த்தனவியலாளர் (Masseur) தரம் III** பதவிக்கு காணப்படும் 06 வெற்றிடங்களுக்கு (ஆண் -03, பெண் - 03) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட (Limited) கட்டமைக்கப்பட்ட நேர்முக தேர்வானது வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முக தேர்வு சபையினைக்கொண்டு நியமன அதிகாரியினால் 2025 ஆண்டு நவம்பர் மாதம் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.10.08 ஆகும்.

குறித்த பதவிக்கு வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் கீழ கடமையாற்றும் ஆரம்ப மட்ட நிரந்தர உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியும்.

## *01.* ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

1.1 2013.01.01ம் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ள, **வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் மர்த்தனவியலாளர் (Masseur)** பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள், அரசநிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30 ஆம் இலக்க 2013.07.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் எதிர்காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு வெற்றிடத்திற்கேற்ப

தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த **மர்த்தனவியலாளர் (Masseur) தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர்.

1.2 இத்தெரிவின் பொருட்டு நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முக தேர்வில் தகுதி பெற்றவர்கள் **மர்த்தனவியலாளர் (Masseur) தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர்.

1.3 இப்பதவி ஒரு வருடகால தகுதிகாண் காலத்தைக் கொண்டதும், நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு **மர்த்தனவியலாளர் (Masseur) தரம் III** இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

1.4 குறித்த சேவைக்கு மூன்று (03) ஆண் விண்ணப்பதாரிகளும் மூன்று (03) பெண் விண்ணப்பதாரிகளுமாக மொத்தம் 06 விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முக தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் உயர் புள்ளி ஒழுங்கில் தெரிவு செய்யப்படுவர்.

1.5 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

1.6 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது 05 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

1.7 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 02. சம்பள அளவுத்திட்டம் :-

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 1 – 2025** க்கு ஏற்ப **மர்த்தனவியலாளர் (Masseur) தரம் III** பதவிக்கான திரட்டிய சம்பள அளவுதிட்டமானது ரூபா **45,230 – 10 x 540 - 11 x 630 - 10 x 890 – 10 x 1,190 – 78,360/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை - **III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## *03.* தகைமைகள் :-

(அ) பொதுத்தகைமைகள்

1. வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் கீழுள்ள அலுவலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆரம்ப மட்ட ஏதாவது ஒரு நிரந்தர பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட காலம் **தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

2. விண்ணப்ப முடிவுக்கு திகதிக்கு முன்னர் ஐந்து வருட சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்

(ஆ) கல்வித்தகைமை

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமை சித்தியுடன் ஏனைய இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(இ) தொழில் தகைமை

மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட (NVQ 2) இரண்டாம் மட்டத்திற்கு குறையாத துறையோடு தொடர்புடைய சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

தேசிய சுதேச மருத்துவ திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் மூன்று மாத கால சான்றிதழ் கற்கை நெறியினை தொடர்புடைய துறையில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஈ) உடற்தகைமை

1. விண்ணப்பதாரி சிறந்த ஒழுக்க நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரியின் உயரம் குறைந்தபட்சம் ஐந்து (05) அடி, மூன்று (03) அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
2. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் வடமாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் வேண்டிய உடல், உள ஆரோக்கியத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) அனுபவம்

வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் கீழுள்ள அலுவலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆரம்ப மட்ட ஏதாவது ஒரு நிரந்தர பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட காலம் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**இப் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர், கூறப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.**

## *04* ஆட்சேர்ப்புமுறை :-

வடக்கு மாகாண போதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முக தேர்வு குழுவினை கொண்டு நியமன அதிகாரியால் நடாத்தப்படும் கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின் மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப் பிரமாணக்குறிப்பு, ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக **மர்த்தனவியலாளர் (Masseur) தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதாரர்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் குறித்த நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். ஆட்சேர்ப்பின்போது அல்லது

ஆட்சேர்ப்பின் பின்னர் தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் உடனடியாக இரத்துச் செய்யப்படும்.

## *05.* விண்ணப்பக் கட்டணம் :-

விண்ணப்பதாரி, விண்ணப்ப கட்டணம் ரூபா. 500.00 ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகமொன்றிலும் காசுக்கட்டளையாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணம் பிரதான தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் தேவைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## *06.* விண்ணப்பிக்கும் முறை :-

6.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து, அதனை 2025**.10.08**ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது கைமூலத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

6.2 விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/207"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6.3 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவர் சிபார்சு செய்யாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6.4 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப் பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிற்கு கட்டமைப்பு சார் நேர்முக தேர்விற்கான கடிதம் நியமன அதிகாரியினால் அனுப்பி வைக்கப்படும்.

6.5 உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர்.

6.6 விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. எனினும், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தொடர்பில் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

## 07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருவராயின், விண்ணப்பதாரியின் விண்ணப்பம் அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும் என்பதுடன், சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரசசேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 08. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேணடும்.

(அ). ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ஆ). செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)

(இ). செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் (Driving Licencse )

## 09. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 10. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை :-

கட்டமைக்கப்பட்ட நேர்முக தேர்வின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். (மொத்தம் 100 புள்ளிகள்)

| இல | புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. மேலதிகமான கல்வித்தகைமை | | |
| | க.பொ.த (சா/த)ப் பரீட்சை பெறுபேற்றிற்கான புள்ளிகள்<br>பழைய பாடத்திட்டம்: D – 04, C – 02<br>புதிய பாடத்திட்டம்: A – 03, B - 02, C- 01 | 25 புள்ளிகள் |
| 02. | மேலதிக அனுபவம் - ஒவ்வொரு ஆண்டிற்கு 06 புள்ளிகள் வீதம் வழங்கப்படலாம் என்பதுடன் 06 மாதங்களுக்கு மேற்பட்ட 12 மாதங்களுக்கு குறைவான முனைப்பான சேவைக் காலத்திற்கு 03 புள்ளிகள் வழங்கப்படும். | 60 புள்ளிகள் |
| 03. | மேலதிக தகைமை - பதவியுடன் தொடர்புடைய மேலதிக பொருத்தமான தகைமைகள் | 10 புள்ளிகள் |
| 04. | நேர்முக பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறமைகள் | 05 புள்ளிகள் |
| மொத்த புள்ளிகள் | | 100 புள்ளிகள் |

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக அல்லது மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

<u>கவனிக்கவும்</u>

(i) இவ்வறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iii) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(iv) இச்சுற்றுநிருபம் தொடர்பான அறிவித்தலினை **www.np.gov.lk** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

*ஆழ்வாப்பிள்ளை சிறி*
*செயலாளர்,*
*மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,*
*வடக்கு மாகாணம்.*
***22.09.2025***

பிரதி :-

1. பிரதம செயலாளர், வடக்கு மாகாணம். - தகவலுக்காக.
2. ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணம். - தகவலுக்காக